DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 107/2018 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சுப்பிரமணியன் |
| Father's Name | : | சாத்தையா |
| Village | : | மன்னன் வயல் கிராமம் |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 68 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.03.2026

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**2 ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை:**

1. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் எனக்கு வரவில்லை. மனுதாரர் பாண்டி மீனாள் கேட்டுக்கொணடதற்கிணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். மனுதாரரும் நானும் ஒரே ஊர் காரர்களா என்றால் நான் மன்னன் வயல் கிராமத்தில் வசித்து வருகிறேன், அவர் வாழ்கின்ற மாணிக்கம் என்ற கிராமத்தில் வசித்து வருகிறார். இரண்டு ஊருகளும் அருகில் உள்ள ஊர்களா என்றால் அருகில் உள்ள ஊர் தான். மனுதாரரை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் கடந்த 20 ஆண்டுகளாக தெரியும். விபத்தில் இறந்த பன்னீர் செல்வம் விபத்தில் போது என்ன வாகனம் ஓட்டிச் சென்றால் என்றால்

இருசக்கர வாகனம் அகும். இருசக்கர வாகனத்தை அவர் தான் ஓட்டினாரா என்றால் அவர் தான் ஓட்டினார். விபத்து எந்த திசையில் இருந்து எந்த திசையை நோக்கி சென்றால் என்றால் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்தார். எதிர் திசையில் வந்த விபத்தை ஏற்படுத்திய வாகனம் எந்த வாகனம் என்றால் ட்ராக்டர் வாகனம் ஆகும் .விபத்தின் போது நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்றால் நான் மிதி வண்டியில் வேலைக்கு சென்று கொண்டிருந்தேன்.

2. விபத்து நடந்த உடன் சத்தம் கேட்டதா என்றால் கேட்டது. சத்தம் கேட்ட பிறகு நான் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் நேரடியாக பார்க்கவில்லை சத்தம் கேட்ட பிறகு தான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்த பன்னீர் செல்வம் என்ன வேலை செய்தார் என்றால் கட்டுமான வேலை பார்த்து வந்தார். அவர் மாதம் எவ்வளவு சம்பளம் பெற்றார் என்றால் ரூ.20,000/— சம்பளம் வாங்கினார். ரூ.20,000/— சம்பளம் வாங்கியதாக நான் சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் மனுதாரரும் ஒரே ஊர்காரர் என்பதால் இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தின் போது நான் விபத்து நடந்த இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகவே எனது சாட்சி ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.